செ.வெ.எண்:14 நாள்: 15.05.2017

# அரியலூர் மாவட்டத்தில் வருவாய் கிராமங்களுக்கான ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்) 17.05.2017 முதல் தொடங்குகிறது.

அரியலூர் மாவட்டத்தில் வருவாய் கிராமங்களுக்கான **ஜமாபந்தி** (வருவாய் **தீர்வாயம்**) 17.05.2017 அன்று தொடங்குகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) **திரு.எஸ்.தனசேகரன்** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**அரியலூர் மாவட்டத்தில்** வருவாய் கிராமங்களுக்கான **ஜமாபந்தி** (வருவாய் **தீர்வாயம்**) 17.05.2017 முதல் தொடங்குகிறது. **அரியலூர் வட்டத்தில் ஜமாபந்தி** (வருவாய் **தீர்வாயம்**) **அரியலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில்** நடைபெறும். இவற்றில் 17.05.2017 அன்று **அரியலூர்** உள்வட்டத்திற்குட்பட்ட பொட்டவெளி, இலுப்பையூர், இராயபுரம், சென்னிவனம், ஓட்டக்கோவில், கோவிந்தபுரம், அமினாபாத், அரியலூர் வடக்கு, அரியலூர் தெற்கு, வாலாஜாநகரம், கயர்லாபாத், கல்லங்குறிச்சி, கடுகூர், அயன்ஆத்தூர், பெரியநாகலூர், தேளூர், காவனூர், விளாங்குடி ஆகிய வருவாய் கிராமங்களுக்கும் **ஜமாபந்தி** நடைபெறும்.

மேலும், **உடையார்பாளையம் வட்டத்தில் ஜமாபந்தி** (வருவாய் **தீர்வாயம்**) **ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தலைமையில்** நடைபெறும். இவற்றில் 17.05.2017 அன்று **ஆண்டிமடம்** உள்வட்டத்திற்குட்பட்ட ஓலையூர், ஆத்துக்குறிச்சி, ஸ்ரீராமன், இராங்கியம், சிலுவைச்சேரி, அழகாபுரம், ஆண்டிமடம், விளந்தை (வடபாகம்), விளந்தை (தென்பாகம்), வரதராஜன்பேட்டை, பெரியகிருஷ்ணாபுரம், திருக்களப்பூர், அணிக்குதிச்சான் (வடபாகம்), அணிக்குதிச்சான் (தென்பாகம்) ஆகிய வருவாய் கிராமங்களுக்கும் **ஜமாபந்தி** நடைபெறும்.

**செந்துறை** வட்டத்திற்குட்பட்ட **செந்துறை வட்டத்தில் ஜமாபந்தி** (வருவாய் **தீர்வாயம்**) **செந்துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் தலைமையில்** நடைபெறும். இவற்றில் 17.05.2017 அன்று **செந்துறை** உள்வட்டத்திற்குட்பட்ட ஆனந்தவாடி, உஞ்சினி, மருவத்தூர், பெரியாக்குறிச்சி, வஞ்சினபுரம், நமங்குணம், நக்கம்பாடி, செந்துறை ஆகிய வருவாய் கிராமங்களுக்கும் **ஜமாபந்தி** நடைபெறும்.

எனவே, பொதுமக்கள் இந்த ஜமாபந்திகளில் பட்டாமாறுதல், பெயர் மாறுதல், நிலஅளவை, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட தனிப்பட்ட கோரிக்கை மற்றும் பொதுவான கோரிக்கை மனுக்களை அளித்து உடனடி தீர்வுகாணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) **திரு.எஸ்.தனசேகரன்** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.